# 4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

## வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படுவது குறித்து

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் பேரவையில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அந்த அறிவிப்பை இப்போது பேரவைக்கு வெளியிடக் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11–50*

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிச் சீமையில் தேவேந்திர குல வேளாளர் இனத்தில் பிறந்து ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, வீர மரணம் அடைந்த தமிழகத்தின் தவப் புதல்வர்களில் ஒருவர் “வீரன் சுந்தரலிங்கம்” என்று அழைக்கப்படும் பெருமகன் ஆவார். ஆங்கிலேயரின் அடக்குமுறை ஆட்சியையும், ஏகாதிபத்திய ஆட்சியையும் எதிர்த்துப் போராடி, தனது தேசிய உணர்வை வெளிப்படுத்திய அந்த மாமனிதருக்கு சரித்திரத்தில் சரியான இடம் தரப்படவில்லை என்ற ஒரு ஆதங்கம் அப்பகுதிவாழ் மக்களுக்கு வெகுகாலமாகவே இருந்து வருகின்றது. இந்த நாட்டின் நன்மைக்கு பாடுபட்ட நல்லோர் அனைவருக்கும் தனது நன்றியறிதலைக் காட்டி வரும் அரசு எங்கள் அரசு. அந்த உணர்வின் அடிப்படையில் வீரன் சுந்தரலிங்கம் என்ற மாமனிதரின் நினைவினைப் போற்றும் வண்ணம், அவரது பெயரில் ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்க (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வழங்கப்பட்டு வரும் நாட்டுப்புற பாடல்களின் வாயிலாக புகழோடு வாழ்ந்த “வீரன் சுந்தரலிங்கம்” அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் அறிய முடிகின்றது. சாதாரண போர் வீரனாக தனது வாழ்க்கையைத் தொடங்கிய சுந்தரலிங்கம், பின்னர் வீரபாண்டிய கட்டபொம்மனின் போர்ப்படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்துள்ளார்.

*1995 நவம்பர் 3]* [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

வெள்ளையத் தேவனும், சுந்தரலிங்கமும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நம்பிக்கைக்கு உரியவர்களாக விளங்கினார்கள் என்றும் அறிய முடிகின்றது. பாஞ்சாலங்குறிச்சியை ஆங்கிலேயர்கள் திடீரென்று முற்றுகையிட்ட போது, வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆணைப்படி, வீரன் சுந்தரலிங்கம், வெள்ளையத் தேவனை அழைத்து வந்ததாகவும், வீரபாண்டிய கட்டபொம்மன் படை ஆங்கிலேயர்களின் படையைத் தாக்கியதாகவும், பின்னர் ஆங்கிலேயர்களின் கையில் சிக்காமல் வீரன் சுந்தரலிங்கம் தப்பித்து விட்டதாகவும், சுந்தரலிங்கம் அவர்களின் வீரத்தைப் பாராட்டி, வீரபாண்டிய கட்டபொம்மன் தங்க விருதையும், முத்து பதித்த காதணிகளையும், முத்து மாலைகளையும் பரிசளித்ததாகவும் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

வீரன் சுந்தரலிங்கம் ஆங்கிலேயர்களின் படைக்கலன்களை அழிக்க முற்பட்டபோது, வீர மரணம் அடைந்ததாக திருநெல்வேலிப் பகுதியில் இன்றும் பேசப்படுகிறது. தேவேந்திர குல வேளாளர்கள் வகுப்பைச் சேர்ந்த இந்தப் பெருமகனாரின் வாழ்க்கை வரலாறு, இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெருமக்களின் சீரிய பங்கையும், அவர்கள் ஆற்றிய அரும்பணியையும், உலகிற்கு வெளிப்படுத்தும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

உயர்ந்த உள்ளத்தாலும், விலை மதிக்க முடியாத தனது வீரத்தாலும், தேசிய உணர்வாலும் தமிழகத்தின் மண்ணின் மைந்தர்களில் ஒருவராக விளங்கிய தேவேந்திர குல வேளாள பெருமக்களின் குலக்கொழுந்தான, வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் பெயரில் விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்டு "வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம்" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற புதிய போக்குவரத்துக் கழகம் விரைவில் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசின் இந்த முடிவை, இம்மாமன்றத்து உறுப்பினர்கள் அனைவரும், மனதார வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த புதிய போக்குவரத்துக் கழகம் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள், விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.